1983 பிப்ரவரி 7] [திரு. செ. அரங்கநாயகம்]

கள் இந்த நூலை வாங்கி ‘ஊடை’ நூலாகப் பயன்படுத்தலாம். இந்த ஏற்பாடுகளின் பயனாக தனியார் துறை நெசவாளர்களுக்குத் தேவையான நூல் நியாய விலையில் கிடைத்துத் தொழில் தடங்கலின்றி நடைபெறுமென்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

தற்பொழுது பருத்தி நூல் விலை இறங்குமுகமாக உள்ளது. கூட்டுறவு நூற்பு ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் 20 நெ. நூல் கட்டு ஒன்றுக்கு ரூ. 96 என்ற விலையில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ளவர்களுக்கு கோவாப்டெக்ஸிலிருந்து மலிவு விலையில் நெசவாளர்களுக்கு நூல் கொடுப்பதற்கு நல்லமுறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் மாஸ்டர் வீவர்ஸ் என்று சொல்லப்படுகின்றவர்களின் கீழ் வேலை பார்க்கும் நெசவாளர்களுக்குக் கிடைக்கின்ற நூலின் விலை அதிகமாக இருக்கிறது என்று அவர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களும், இந்தத் துறையின் டைரக்டர் அவர்களும் தென் இந்திய நூற்பாலைக் கழகத்தோடு தொடர்பு கொண்டு 3,000 பேல்கள் பலரக நூல்களும், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் 1,200 பேல்கள் நூலும் கிடைக்கும் வகையில் அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. ஆகவே, நெசவாளர் பாதுகாப்புச் சட்டம் அமலில் இருப்பதால் மாஸ்டர் வீவர் தடை செய்யப்பட்டு அவர்களின் பிடியிலிருந்து நெசவாளர்களைப் பாதுகாப்பதற்கு அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற நெசவாளர்களுக்கு நூல் கிடைப்பதில் எந்தவிதமான சிரமமும் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இது மாஸ்டர் வீவர்களிடமிருந்து பணியாற்றுகின்ற கைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டுமென்று கருதி, மாஸ்டர் வீவர்ஸ் தங்களுக்கு நூல் கட்டுப்படியாகக் கூடிய விலையில் கிடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதுதான் இந்த அறிக்கையிலே தரப்பட்டிருக்கிறது. இதிலே முக்கியமான பிரச்சினை என்னவென்றால், கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்களாக இல்லாத கைத்தறி நெசவாளர்கள் உடனடியாகக் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துக்கொண்டு, அரசின் மூலமாகக் கிடைக்கின்ற அந்தப் பயன்களைப்பெற வேண்டுமென்பதுதான் அரசின் முக்கிய நோக்கம். அந்த வகையில், இந்த நெருக்கடி காலத்திலேயும் கூட, கடந்த ஒரு வாரத்திற்குள்ளாக குறிப்பாக மதுரையில் 12 புதிய கூட்டுறவு நெசவாளர் சங்கங்